நல்லூர் ...
NMC

# பலாலியில் துப்பாக்கிச்சூடு; 2 இராணுவம் பலி

## நேற்று சம்பவம்

(கொழும்பு)

பலாலி இராணுவ முகாமில் காவலரணில் பாதுகாப்புக கடமையில் ஈடுபட்டிருந்த இரு இராணுவத்தினர் நேற்று நண்பகல் சுட்டுக்கொல்லப் பட்டதாக கொழும்பில் இராணுவ தலைமையகம் தெரிவித துள்ளதாக பி. பி. சி. தெரிவித்தது.

நேற்று நண்பகல் 1-40 மணியளவில் ஆட்கள் யாரும் இல்லாத பகுதியில் புகுந்தவர்கள் காவல் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது சுட்டபோது ஒரு லான்ஸ் கோப்ரலும் மற்றொரு சிப்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 26 இதழ் 61
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 09-04-1995

## விடுதலைப்புலிகள்

### வன்மையாக மறுப்பு

[கொழும்பு]

பலாலி இராணுவ முகாம் காவலரணில் இரு படையினர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எது வித தொடர்புமில்லை என புலிகள் தெரிவித்துள்ளதாக பி பி. சி. தெரிவித்தது.

மேற்படி சம்பவம் தொடர்பாக உடனடியாக பலாலி இராணுவத்தினர் யாழ்ப்பாணத்திலுள்ள புலிகளின் உள்ளூர் தலைவர்களுடன் றேடியோ தொடர்பை ஏற்படுத்தி கேட்டபோதே புலிகள் இதற்கு மறுப்புத் தெரிவித்தனராம்.

இது புலிகளின் செயல்

(4-ம்பக்கம் பார்க்க)

# பலபத்தபெண்டி தலைமையில்

# ஐவர் அடங்கிய அரச குழுவினர்

# நாளை காலை யாழ். வருகின்றனர்

## ஆயர் கென்னத், உயங்கொடவும் அடங்குவர்

[கொழும்பு]

நாலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் ஐவர் அடங்கிய அரச குழுவினர் நாளை காலை ஜனாதிபதியின் செயலர் திரு. பலபத்தபெண்டியின் தலைமையில் யாழ். வரவுள்ளனர். இக்குழுவில் அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்ணாண்டோ, பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட ஜெயசேகர, பிரிகேடியர் பீரிஸ், கப்டன் பிரசன்ன ராஜரத்ன ஆகியோரும் அடங்குவர்.

நாளை காலை யாழ்.வரும் இக்குழுவினர் ஒரு நாள் மட்டுமே விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடாத்துவர்.

பேச்சுக்கள் முடிந்ததும் இக்குழுவினர் நாளை மாலையே கொழும்பு திரும்புவர்.

முன்னர் அரசகுழுவில் இடம் பெற்ற இலங்கைவங்கி தலைவர் திரு. ராஜன் ஆசீர்வாதம்.

(4ம் பக்கம் பார்க்க)

## பேராதனை

## பல்கலை. மாணவர்

### 11 பேர் இடைநிறுத்தம்

[கண்டி[

பேராதனை பல்கலைக்கழகத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற மாணவர்களின் கோஷ்டி மோதலையடுத்து 11 மாணவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்கள்.

இதனால் அண்மையில் நடைபெறவிருந்த பரீட்சைகள் பின் போடப்படவுள்ளன.

இந்த மோதலினால் 13 மாணவர்கள் படுகாயமடைந்தனர். இவர்கள் பல்கலைக்கழக ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

புதிய மாணவர்களின் தகவல்களின்படியே இந்த 11 மாணவர்களும் பல்கலைக்கழகத்தில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். மசி

## அரசின் அரசியல் தீர்வுபற்றி

## 4ம் கட்டத்தில் பேசப்படாது

(கொழும்பு)

நாலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் அரசியல் தீர்வு பற்றி பேச்சுக்கள் நடாத்தப் படமாட்டாதென தெரிவிக்கப்பட்டுள்ளதாக பி. பி. சி. தெரிவித்தது.

பி.பி.சி. மேலும் கூறுகையில்: கடந்த 3 மாதங்களின் பின் மீண்டும் பேச்சுக்கள் தொடங்கினாலும் இதில் அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்கள் இடம்பெறாது பேச்சு வார்த்தைப் பட்டியலி

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜெரிக்குப் பின்

### லக்கி அல்கம புதிய தளபதி

(கொழும்பு)

இராணுவத்தின் அடுத்த தளபதியாக மேஜர் ஜெனரல் லக்கி அல்கம பதவிக்கு வருவார் என கொழும்புத் தகவல்கள் தெரிவிததுள்ளன.

தற்போது இராணுவத் தளபதியாக இருக்கும் லெப்டினன் ஜெனரல் ஜெரி டி சில்வாவின் பதவிக்காலம்முடிவடைந்ததும் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் லக்கி அல்கம பதவிக்கு வருவார் எனவும் தெரிவிக்கப்பட்டது. இசி

## மேலதிகமாக 20லீற். டீசல்

## வடபகுதிக்கு அரசு அனுமதி

(கொழும்பு)

வடபகுதிக்கான பாவனைப் பொருட்களை துரிதமாக வவுனியா ஊடாக அனுப்பிவைப்பதற்கு புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று வவுனியா இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது: வழமைக்கு மாறாக 20 லீற்றர் டீசலை லொறிகளில் கூடுதலாக எடுத்துச் செல்லலாம். வவுனியாவில் இருந்து வடபகுதிக்குப் பொருட்களை ஏற்றிச்செல்லும் லொறிகள் பாதுகாப்புச் சோதனை நடைமுறைக்காக இனிமேல் மதவாச்சி வீதித் தடை முகாமுக்கு போய்வரத் தேவையில்லை.

பொருட்களை வவுனியாவில் இருந்து ஏற்றிச் செல்லும் லொறிகள் பொருட்களை ஏற்

(4ம் பக்கம் பார்க்க)

## வத்தேகமவில்

### ஆயுதம், வெடிமருந்து மீட்பு

[கொழும்பு[

வத்தேகம பகுதியில் வர்த்தகர் ஒருவரின் வீடடிலிருந்து பொலிசார் பெருமளவு ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் மீட்டுள்ளனர்.

பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்து இந்த வர்த்தகரின் வீட்டை சுற்றிவளைத்த பொலிஸ் கோஷ்டி வீட்டை சோதனையிட்டபோது அங்கிருந்து ஆயுதங்கள், வெடி

(4-ம் பக்கம் பார்க்க)

## புதிய தேர்தல் முறைக்கு

## 9 அரசியல் கட்சிகள் எதிர்ப்பு

[கொழும்பு]

பொதுசன ஐக்கிய முன்னணி அரசு கொண்டுவரத் திட்டமிட்டிருக்கும் புதிய தேர்தல் முறைக்கு ஒன்பது அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

தற்போதுள்ள விகிதாசார தேர்தல் முறையை மாற்றி முன்னர் நடைமுறையிலிருந்த தேர்தல் தொகுதி முறையை மீண்டும் கொண்டுவருவதற்கே அரசாங்கம் இப்போது திட்டமிட்டிருக்கிறது.

பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் கூட அரசாங்கத்தின் தேர்தல் முறை மாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக ராவய பத்திரிகைசெய்தி வெளியிட்டுள்ளது.

புதிய தேர்தல் முறையின் கீழ் அடுத்த நாடாளுமன்றத்

(4-ம்பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. நடவடிக்கை

## துரிதமடைகிறது

(கொழும்பு)

1971ம் ஆண்டு ஜே. வி. பி. கிளர்ச்சி ஞாபகார்த்த நினைவாக தென்னிலங்கையில் பல நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

போஸ்டர்கள் ஒட்டப்பட்டு கொடிகள் பறக்கவிடப்பட்டு கூட்டங்கள்பல ஏப்ரல் 5ம் திகதி இடம்பெற்றன என்றும தெரிவிக்கப்படுகிறது.

(2ம் பக்கம் பார்க்க[

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்கு

நாவற்குழி கண்டி வீதியில் 45 பரப்பு நெற் காணியுடன் கல் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்;ஆ ஆனந்தராசா, 414/4, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [சி-1442[

### வியாழ வக்கிர சஞ்சாரம்

(4-8-95 வரை) யுவவருஷ புத்தாண்டின் எல்லா ராசிப் பலன்களும் (நூலாசிரியர்: சத்யா), பாடசாலை உபகரணங்கள், [புத்தகங்கள் |விற்பனையாகின்றன. தினேஷ் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-1443)

### திருமண சேவை

எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள் செவ்வாய்க் குற்றமற்ற 38 வயது எஞ்சினியருக்கும் 37 வயது ஆசிரியருக்கும் 36 வயது டொக்டருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம். (சி-1437)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit s) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1420)

### இலவச பாட புத்தகங்கள்

(பண்டத்தரிப்பு)

சங்கானை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இலவச பாடப்புத்தகங்கள் சங்கானை கோட்டகல்வி அலுவலகத்தினால்விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

பெரும்பாலான பாடசாலைகளுக்கு மாட்டு வண்டிகளில் இந்த பாடப் புத்தகங்கள் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்டது. 72

எமதுபிரதேசத்தின்

# சுகாதார சேவைகள் பாராட்டப்படவேண்டும்

(யாழ்ப்பாணம்)

போர் நடவடிக்கைகளால் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில், பல கஷ்டங்களின் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதார, வைத்திய சேவைகள் பாராட்டப்பட வேண்டியவை.

யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் உலக சுகாதார தினத்தையொட்டி யாழ். மாநகராட்சி மன்றச் சுகாதாரப் பிரிவினரால் நடத்தப்பட்ட சுக நல நிகழ்வு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

மாநகராட்சி மன்றச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. பாலசிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில்: மனித வாழ்வுக்கு அடிப்படையாக அமைவது சுக வாழ்வு என்றார்.

இந்நிகழ்வின்போது கண் பார்வை குறைந்த மாணவர்களுக்குப் பிரதம விருந்தினர் இலவசமாக கண்ணாடிகளை வழங்கினார்.

யாழ். மாநகராட்சி மன்ற ஊழியர்களின் சுக வாழ்வு பற்றிய கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. 162-ரி

# சைக்கிள் திருட்டு ஓரளவு குறைவு

(ஆனைப்பந்தி)

யாழ். காவல் பணிமனையின் கண்காணிப்பின் கீழுள்ள டகுதிகளில் தற்போது சைக்கிள திருட்டுக்கள் ஓரளவு குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

சைக்கிள் திருட்டில் ஈடுபட்டுவந்த பெரும்பாலானோர் கைதுசெய்யப்பட்டு ள்ளமையும், கவனயீனமான சைக்கிள் உரிமையாளர்களுக்கு காவல்துறையினர் நேரடியாக நின்று அறிவுறுத்தல்வழங்கியமையுமே இவ்வாறு திருட்டுக் குறைந்தமைக்கு காரணம் எனக் காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. 101-சி

# கடல்வள பாடத்திட்ட ஆசிரியர் நூல் வெளியீடு

(தாளையடி)

கடல் வளம் பாடத் திட்ட ஆசிரியக் கைநூல் வெளியீடும் கடல் வளம் பாடப் பயிற்சிப் பயிலுநர்க்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி மண்டபத்தில், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கடல் வளப் பகுதிப் பொது முகாமையாளர் திரு. தூயவன் தலைமையில் நடைபெற்றது.

கைநூலின் முதற் பிரதியை யாழ். கல்வித் திணைக்களம் வலயம்-1 கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பியும, சிறப்புப பிரதிகளைத் தீவகம், வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் ஒன்றியத் தலைவர்களும் பெற்றுக்கொண்டனர்.

மதிப்பீட்டுரையை பல்கலைக்கழக விலங்கியல்துறைத் தலைவர் பேராசிரியர் வீ. கே கணேசலிங்கம், புவியியல் துறை விரிவுரையாளர் எஸ். பாலச்சந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். 103-ரி

### பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களத்தில், பாடசாலை வேலைகள் பிரிவு கட்டடப் பிரிவுப் பொறியியலாளராகக் கடமையாற்றியதிரு. எம். ஏ. பிரான்சிஸ், வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் பாடசாலை வேலைகள் பணிப்பாளர் நாயகமாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். -109

### முதலிடம்

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் சி. மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இளங்கோ இல்லம் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. 160

### கால்நடை வளர்ப்போர் சமாசம்

(யாழ்ப்பாணம்)

விலங்கு வேளாண்மை அபிவிருத்தியைத் துரித கதியில் மேற்கொள்ளும் நோககோடு யாழ். மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களை இணைத்து ஒரு சமாசத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை, தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்கள், மருந்துகள் மற்றும் உள்ளீடுகளை மொத்தமாகப் பெற்றுக் கிளைச் சங்கங்கள் ஊடாகக் கிராம மக்களுக்குச் சீரான விநியோகங்களை மேற்கொள்வதற்காகவும், ஆலோசனை வழங்கவும், கால்நடை வளர்ப்பில் கிடைக்கக்கூடிய உற்பத்திப் பொருட்களைச் சந்தைப் படுத்துவதற்கும் இச்சமாசம் பெரிதும் பயன்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதிகார பார

# சுமையை ஏற்றி இறக்க விசேட படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உற்பத்திப் பொருட்களை பெருநிலப்பரப்பிலிருந்து குடாநாட்டுக்கும், குடாநாட்டிலிருந்து பெருநிலப்பரப்பிற்கும் கிளாலிக் கடலூடாக ஏற்றி இறக்க அதிகம் பாரம் சுமக்கக்கூடிய படகொன்றை வடிவமைத்துள்ளது.

இப்படகை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழில் பகுதியின் துணை நிறுவனமாகிய யூனிரெக் பொறியியல் நிறுவனம் தேர்ந்த பொறியியலாளர்களின் ஆலோசனையுடன் வடிவமைத்து உருவாக்கி சேவையில் விட்டுள்ளது. இதன் மூலம் ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையில் உற்பத்தியாகிய ஓடு, செங்கட்டி ஆகியவற்றைக் குடாநாட்டுக்கும், உப்பு உற்பத்தி நிறுவனத்தின் உணவுக்கான உப்பும், மீன் கருவாடு பதப்படுத்துவதற்கான அரைத்த உப்பையும் பெருநிலப்பரப்புக்குச் சந்தைப்படுத்த வழி ஏற்பட்டுள்ளது.

ஓரேநேரத்தில் 15000கிலோவுக்கு ($1\frac{1}{2}$ லொறி லோட்) மேற்பட்ட எடையைச் சுமக்கக்கூடியதாக இப்படகு வடிவமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும் உள்நாட்டு தனியார் உற்பத்திகளும், பெருநிலப்பரப்பின் குறைந்த செலவில் சந்தைப்படுத்துவதற்கும் இதனல் வாய்ப்பேற்பட்டுள்ளது. ரி

### முறைசாராக் கல்வி வகுப்பு

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பின்வரும் முறைசாராக கல்வி வகுப்புகளை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அக்கல்லூரியின் அதிபர் கேசவராசன் அறிவித்துள்ளார்.

அவையாவன: ஆங்கில சுருக்கெழுத்து, மோட்டார் றீவைன்டிங், படவரைஞருக்கான பயிற்சி. ஆங்கில டிப்ளோமா ஆகியனவாகும்.

தகுதியானவர்களை உடன் விண்ணப்பிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். 71

### நிர்வாகிகள் தெரிவு

(பண்டத்தரிப்பு]

சண்டிலிப்பாய் மணிமேகலை சன சமூக நிலையத்தின் 4வது வருடாந்த பொதுக்கூட்டம அண்மையில் நடைபெற்ற போது திரு செ. இளமுருகன் மீண்டும் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக திருமதி சி. விஜய செல்வியும் பொருளாளராக திரு,க. சுதர்சனும் தெரிவுசெய்யப்பட்டனர். 72

### மரக்கன்றுகள் விநியோகம்

[கொழும்புத்துறை]

யாழ். தொல்புரம் சமநல சேவை நிலையத்தினரால் தற்போது மக்களுக்கு நல்லின தென்னம்பிள்ளை கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

வலிமேற்குப் பிரதேசத்தில் தென்னைவள அபிவிருத்தியை மேலும் அதிகரிக்கும் நல்ல நோக்குடன் இப்பகுதி மக்களுக்கு மாதுளை, தோடை எலுமிச்சை போன்ற பலமரக் கன்றுகளும் இங்கு வைத்து விநியோகம் செயப்பட்டு வருகிறது. ]154]

### ஆலோசனை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிராம உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 1993ம் ஆண்டில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கு இதுவரை நியமனம் கிடைககாதோர் தமது நிலை குறித்து யாழ். மாவட்ட அரச அதிபருக்கு மகஜர் ஒன்றைச் சமர்பிக்கவுள்ளனர்.

மேற்படி மகஜர் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை 10ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ் செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இவ் ஆலோசனைக் கூட்டத்தில் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியும் இதுவரை நியமனம் கிடைக்காத அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இக்கூட்டத்தை ஒழுங்கு செய்தோர் கேட்டுளளனர். 162

### விவசாயப் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் விவசாய திணைக்களத்துடன் இணைந்து திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் விவசாயப் பயிற்சிகள் நடாத்தப்படஉள்ளது.

உள்நாட்டு மரக்கறி பயிர்களின் பயிர் பாதுகாப்பு, இயற்கைப் பசளைப் பாவனை, கம இரசாயனங்கள், ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம், மரக்கறிப் பயிர் நாற்று மேடை, பழப்பயிர் பராமரிப்பு ஒட்டு முறைகள், தெளி கருவிகளை இயக்குதலும் பராமரித்தலும் ஆகிய விடயங்களில் தனித்தனியே ஒரு நாள்பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன.

பயிற்சி வகுப்பில் பங்குபற்ற ஆர்வமுள்ள விவசாயிகள் தங்கள் பகுதி உற்பத்திக் குழுக்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செய்திக் குறிப்பொன்றின் மூலம் கேட்டுள்ளது.

### இன்று

(கொழும்புத்துறை)

யாழ். திருநெல்வேலி இராமகிருஷ்ணலயம், கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்திய பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது. -154

### திருமந்திர வகுப்புகள்

(கொழும்புத்துறை)

யாழ், இந்துக்கல்லூரி ஆரம்பப்பிரிவு பாடசாலையில் பிரதி திங்கட்கிழமை தோறும் இலவச திருமந்திர வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

இதேவேளை இங்கு பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் சித்தாந்த வகுப்புகளும் நடாத்தப்பட்டு வருகின்றன. [154]

### ஓய்வூதியக் கொடுப்பனவு

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான ஏப்பிரல் மாதக்கொடுப்பனவு தற்போது அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படிசங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்பட்டுவருகின்றது. 101

### சுயதொழில் ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கடன் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது

இந்த வகையில் லவனிதா குடியிருப்பில் வசிக்கும் குப்பிழானைச் சேர்ந்த 12 குடும்பங்களுக்கு தலா ரூபா 5,000 வீதம் 60,000 ரூபா வழங்கி ஊக்குவிக்கப்ப்ட்டுள்ளது.

### திருட்டு முயற்சி

(ஆனைப்பந்தி)

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் கடந்த 6ம் திகதி இரவு திருட்டு முயற்சியொன்று இடம் பெற்றுள்ளதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நள்ளிரவில் கதவையுடைத்து உட்குந்த திருடர்கள் கையில் எடுத்துச் செல்லக் கூடிய பெறுமதியான பொருட்கள் அகப்படாமையால் தமது முயற்சியைக் கைவிட்டுச்சென்றுள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 101-சி

### தற்காலிக கல்விப் பணிப்பாளர்

(கொழும்பு)

யாழ். கல்வி வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளராக திரு. எஸ். சுப்பிரமணியம் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். கல்வி வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளராக இருந்த செல்வி திலகவதி பெரியதம்பி வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றதையடுத்தே திரு. சுப்பிரமணியம் தற்காலிகமாக கடமையாற்றவுள்ளார். - ம

### ஜே.வி.பி.

(1ம பககத் தொடர்ச்சி)

இதேவேளை ஜே.வி.பி. மறைமுகமாக தனது ஆயுத நடவடிக்கைகளில் இறங்கிவருவதாக புலனாய்வுத் துறையினர் அரசுக்கு தெரிவித்துள்ளனர். ஜே. வி. பி. யினர் தெற்கில் ஆட்களைத் திரட்டும்பணியில் துரிதமாக செயற்பட்டு வருவதாகவும் புலனாய்வுச் செய்திகள் தெரிவிக்கின்றன! மசி

### மணிவாக்கு

சட்டம் சிலந்திவலை போன்றது. அதில் சிறு ஈக்கள் சிக்கிக் கொள்ளும் ஆனல் குளவிகளும் வண்டுகளும் அதை அறுத்துக் கொண்டு ஓடிவிடும்.

- ஸ்விஃப்ட்

## நமது நோக்கு

### வேலி அரக்குதல்!

நியூசிலாந்தில் குடியேறிய வெள்ளையர்கள் தமதுஇராணுவபலத்தைக் காட்டியும், வேறு வழிகளைக் கையாண்டும் தமது குடியிருப்பு நிலங்களை விஸ்தரித்தார்கள்.

எமக்கு விளங்கக்கூடிய மொழியில் கூறுவதாயின், கதியால்களைத் தள்ளிப் போட்டு வேலியை அரக்கி வந்தார்கள்.

அங்கிருந்த மயோரிய இன விகிதாசாரம் வீழ்ச்சியுற்றுத் தற்போது 12 சதவீதமாகிவிட்டது.

அதுமாத்திரமல்ல - அந்த நாட்டின் மொத்தமாக உள்ள 28.8 மில்லியன் ஹெக்ரயர் நிலத்தில் 1 2 மில்லியன் ஹெகரயர் நிலமே தற்போது அவர்களிடம் உள்ளது.

1840ல் - வெள்ளையர்களுக்கும் மயோரி இனத்தவர்களுக்குமிடையே ஒப்பந்தம் உருவாகியது. அப்படியிருந்தும்கூட நில ஆக்கிரமிப்பு முற்றுக நிறுத்தப்படவில்லை.

அடிமைகளாக, வாயில்லாப் பிராணிகளாக, அடக்குமுறைகளைக் கண்டு அஞ்சி நடுங்கி எத்தனை காலம்தான் வாழ முடியும்?

தமது நில உரிமைக்குக் குரல் கொடுத்தார்கள். வேறு வழியில்லாமல் அநியாயமாக நிலம் பறித்தெடுத்ததை ஒப்புக்கொண்டு 1921, 1947ல் நட்டஈடு கொடுக்க முன்வந்தார்கள்.

ஆனல் - அது ஆனைப் பசிக்குச் சோளப்பொரி போன்றே அமைந்தது. ஒலிக்கத் தொடங்கிய குரல் மேலும் ஓங்கி ஒலித்தது.

இன்று - ஒரு பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மீன்பிடி, உரிமைகள், கல்வி, தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. முடிக்குரிய நிலம் வழங்கி வரப்படுகின்றது.

எடிமாபோ என்ற தலைவன் பத்தாண்டு காலமாக நீதிமன்றில் நில உரிமைக்காக வாதாடி, மயோரி இனத்திற்குச் சார்பான தீர்ப்பைப் பெற்றுக்கொண்டான்,

இங்கு - நில ஆக்கிரமிப்பு பல்வேறு ரூபங்களில் தொடர்கிறது. கிராமங்களை இணைத்தல், மீளக் குடியமர்த்தல் என்ற போர்வையில் மாவட்டங்களின் எல்லைகள் மாற்றி அமைக்கும் முயற்சிகள் தொடர்கின்றன. மக்கள் விழிப்பாக இருந்து போராட வேண்டாமோ?

# ஐ. தே. க. வின் மேதினம் கண்டியிலே நடைபெறும்

## கட்சியின் செயற்குழு முடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் மேதினக் கூட்டத்தையும், பேரணியையும், முன்னர் திட்டமிட்டபடி கண்டியில் நடத்துவதற்கு முடிவு செய்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் செயற் குழு இந்த முடிவை எடுத்தது

கண்டியில் மேதினக் கூட்டத்தையும், பேரணியையும் நடத்துவதற்குப் பொலிஸார் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தடை விதித்ததைத் தொடர்ந்து, கட்சியின் செயற்குழு கடந்த வியாழக்கிழமை இரவு அவசரமாகக் கூடியது.

பொலிஸார் தடை விதித்தாலும், தாம் முன்னர் எடுத்த முடிவின்படி எதிர்வரும் மேதினத்தைக் கண்டியில் நடத்துவதெனக் கட்சி உறுதியான முடிவு செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. -இ

## பலதும் பத்தும்

### செய்வன...!

''செய்வன திருந்தச் செய் !'' என்பது அனுபவ மொழி. அதாவது... எதையும் அவசரக் கோலத்தில்... அரைகுறையாகச் செய்யக் கூடாது. முழுமனதோடு, அக்கறையோடு செய்ய வேண்டும்.

ஆனல்... செய்யும் காரியமெல்லாம் பூரணத்துவம் அடையவேண்டும், பூரண வெற்றி தரவேண்டும் என்று எண்ணிச் செயற்படுவதாற் சில வேளைகளிற் சங்கடங்கள் ஏற்படும் என எச்சரிக்கிருர்கள் மனேதத்துவ நிபுணர்கள்.

சிலர் பூரணத்துவம் பெற வேண்டும் என்பதற்காக, மீண்டும் மீண்டும் சிந்திப்பதும், தொடங்காமல் இருப்பதும் கடைசியில்ஏங்குவதும் மனநெருக்கடிகளை ஏற்படுத்தும் என்கிருர்கள்.

ஒரு வகுப்பு மாணுக்கர் எல்லோரும் நூற்றுக்கு நூறு புள்ளி பெறுகிருர்களா? 35—40 புள்ளிகள் பெறுபவர்கள் சிந்தியடைந்தார்கள் என்று ஏற்றுக் கொள்கிருேமல்லவா?

— மயூரன்

# றேயல் கல்லூரி போல் நாடுமுழுவதும் கல்லூரிகள்

—ஜனதிபதி

(கொழும்பு)

ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும், கொழும்பு றேயல் கல்லூரி மட்டத்திலான இரு கல்லூரிகள் அமைக்கப்படும்.

ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கம்பளையில் கல்லூரி ஒன்றின் வைபவத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய ஜனதிபதி மேலும் கூறியதாவது:

பெற்றேர் அனைவரும் தங்கள் பிள்ளைகளை மிகச் சிறந்த பாடசாலைகளில் அனுமதிக்க விரும்புகின்றனர்.

எனவே சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகள் கிராமிய மட்டத்தில் அமைக்கப்படும்.

தேர்தல் காலத்தின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் ஒன்றரை வருடத்திற்குள் நிறைவேற்றப்படும் என்ருர். -இ

# ஊழியர் நம்பிக்கை நிதியம் செலுத்துவதில் மோசடி

[கொழும்பு]

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றை செலுத்துவதில் தனியார் துறையினர் பெரும் மோசடியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது,

சுமார் 40 லட்சம் பேர் தொழில் பார்க்கும் தனியார்துறையில் 60 சதவீத மானவர்களின் ஊழியர்சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவை இதுவரை செலுத்தப்படவில்லையென யுக்திய சிங்களப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

சுமார் 24 லட்சம் தனியார் துறை ஊழியர்களின் சேமலாப மற்றும் நம்பிக்கை நிதி இதுவரை செலுத்தப்படாமல் இருப்பதாகவும் அந்தப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# ராஜீவை கொல்ல முயற்சி செய்தவர்களுக்கு தண்டனை

(புதுடில்லி]

மறைந்த முன்னுள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியை 1989-ம் ஆண்டு அக் 2ம் திகதி ராஜ்காட்டில் கொலை செய்ய முயன்ற நான்கு பேருக்குபுதுடில்லியிலுள்ள சிறப்புத் தடாநீதிமன்றம் நேற்று முன்தினம் தண்டனை வழங்கியது.

அப்போது பிரதமராக விருந்த ராஜீவ்காந்தி மகாத்மா காந்திசிலைக்கு அஞ்சலி செலுத்தச் சென்றபோது கரம்ஜீப்சிங் என்பவர் கைத்துப்பாக்கிஒன்றினுல் அவரைச் சுட்டுக் கொலை முயற்சித்தார். கரம்ஜீப்சிங் மீது கொலை முயற்சி குற்றமும் அவரது மூன்று கூட்டாளிகள் மீது கொலை செய்ய திட்டமிட்ட குற்றமும் சுமத்தப்பட்டுள்ளன. ரி

# மொரிஷியஸ் நாட்டிலும் இலங்கையருக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு[

இலங்கையர்க்கு மொரீஷியல நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையிலுள்ள மொரீஷியஸ் நாட்டின் தூதுவர் ஸ்ரீஈஸ்வரன் தயது நாட்டில் ேதர்ச்சி பெற்ற தொழிலாளர்க்கு நல்ல வாய்ப்பு இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

பத்துலட்சம் பேரைக் கொண்ட மொரீயஸ் தீவு இலங்கையிலிருந்து வடமேற்கே மூவாயிரம் கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது.

மொரீஷியஸில் ஏற்கனவே சமார் 100 இலங்கையர்வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

கணக்கியல். கம்பியூட்டர், பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளில் இந்த நாட்டில் நல்லவேலை வாய்ப்புக்கள் உள்ளன.

சமீபத்தில் தாம் மொரீஷியசுக்கு விஜயம் செய்த போது அந்நாட்டு அமைச்சர்களுடன் இது தொடர்பாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாகவும் திரு. ஸ்ரீ ஈஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

மொரீஷியஸ் நாட்டவர்க்கு தொழில் முசைறார்ந்த நிறுவனங்களை அமைப்பதற்காக தேர்ச்சித்திறமைகளை வழங்குவது பொதுவசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது ஆகியவற்றேடு இந்தியா வழியாக இலங்கைக்கும் மொரீஷியசுக்கும் விமான சேவையை ஏற்படுத்துவது பற்றியும் இந்த பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

### இராசி பலன்

09—04—1995

ஞாயிற்றுக்கிழமை

**(தமிழுக்கு பங்குனி—26)**

நவமி முன்னிரவு 10-12 வரை, பூசம் பின்னிரவு 4-00 வரை, சித்தயோகம், இராகு காலம் 4-37 முதல் 5-06 வரை சுபவேளை காலை 9-07 முதல் 10-37 வரை.

மேடம்: கடும் உழைப்பு, அலைச்சல், வீண்கர்வம்.

இடபம்: திருப்திகொள்ளல் வாக்குவன்மை, புகழ்,

மிதுனம்: அதிகாரிகள் சினம் தொழில் பகை, பணமுடை.

கடகம்: முகஸ்துதி, குடும்ப சுகம், அறிஞர் சந்திப்பு.

சிங்கம்: உறவினர் விரோதம், மனச்சுமை, யோசனை.

கன்னி: விருந்தோம்பல், பிதா உதவி, தெய்வசிந்தனை.

துலாம்: கூடிக்கலந்தாலோசித்தல், பணவரவு, பயணம்,

விருச்சிகம்: மனச்சஞ்சலம். குடும்ப பிரிவு, வேற்றுமை.

தனுசு: அமைதிக் குறைவு, விரோதிபயம், வேண்டாத பழி.

மகரம்: முயற்சி பலிதம், வாகனசுகம், பொதுப்பணி.

கும்பம்: பிறர் ஒத்தாசை காரியசித்தி, சுபக்கனவு.

மீனம்; மனச்சங்கடம், வீண் விரயம், அயலவர் பகை.

— ஜோஸ்யர்

### வீதிசீர்கேடு

(கோப்பாய்)

கடந்த பல வருடங்களாக புத்தூருக்கும் மட்டுவிலுக்கும் இடையில் உள்ள வீதி திருத்தப்படாமல் உள்ளது இதனல் இப்பகுதியால் பயணம் செய்யும் வியாபாரிகளும் பயணிகளும் பாதிப்படைகிருர்கள். -150

### பனைவள அபிவிருத்தித் திட்டங்கள்

(உடுவில்)

பனை வள அபிவிருத்தித் திட்டங்களில் பதநீர், வடிசாராயம், பனை வெல்லம், ஒடியல், பனங்கிழங்கு என்பவற்றின் உற்பத்தியை அதிகரித்தல், கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்தல், பனந்தும்பு பிரித்தெடுத்தல் முதலிய திட்டங்களை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் விரிவுபடுத்தப் பனைவள அபிவிருத்திச் சபை முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகின்றது. -109

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-04-09

ஞாயிறு இரவு

08-02 இசையரங்கம் நிகழ்ச்சியில் செல்வி பாக்கிய லட்சுமி நடராஜாஅவர் வயலின் கச்சேரி
08-30 செய்திகள்
08-40 தொடர்நாடகம்கருணை ரவிஒழுதும் காணிநிலம் வேண்டும்'' அங்கம்-07

1995-04-10

திங்கள் காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானெலி மாலை ஒலிபரப்பு

1995—04—09

ஞாயிறு மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 மழலைக்காக
05-30 கதம்பம்
06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
06-02 உங்கள் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

### தவக்கால நற்சிந்தனை

''இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்?"

(சங். 21: 1)

வேதனை நிறைந்த இதயக் குமுறல் எமக்காக உயிர் கொடுக்கத் துணிந்தவரின் மன்ருட்டு. இவ்வேண்டுகோள் எமக்காகவிடப்பட்ட தூண்டுகோள். நாம் இனியும் கல்மனத்தவர்களாக வாழாது மென்மனத்தவர்களாக இறைஅடி நாட, பாடுகளின் பாரத்தை நாங்களும் சேர்ந்து சுமக்க அழைக்கிறது.

— தா. மைதிலி

### தடகள ஆட்டபோட்டி

(தாளையடி)

செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலய வருட இல்ல தடகள ஆட்ட போட்டி அண்மையில் பாடசாலைவிளையாட்டு மைதானத்தில்உபஅதிபர்எம். சிராளகந்த பாலன் தலைமையில் நடைபெற்றது. -163

நாம் வாழ எம்மண்ணில் வளமுண்டு-ஏன் மண்டியிட வேண்டும் மாற்ருனிடம்

# சந்திரிகாவை தெரிவுசெய்தது சமாதானத்துக்காகவே

– அமைச்சர் ரத்வத்தை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவைப் பெரும்பான்மை மக்கள் ஆட்சியில் அமர வகை செய்தது நாட்டின் சமாதானத்துக்காகவேயாகும் என்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த கொழும்பில தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்; சமாதானம் ஏற்பட்டால் நாடு தானாகவே துரித அபிவிருத்தி அடையும். நாடு யுத்தத்துக்காக சுமார் 2900 கோடி ரூபாவை செலவு செய்கின்றது. இந்தப் பெருந்தொகை பணத்தை மிச்சம் பிடித்தால் நாட்டின் சகல பிரச்னையையும் தீர்த்து அபிவிருத்தியை மேற்கொள்ளலாம்.

எனவே சமாதானத்துக்காக பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். பேச்சுவார்த்தை மூலமோ அல்லது வேறு வழிகள் மூலமோ சமாதானத்தை அடைந்தே தீருவோம் என்றார். -ம சி

---

கொழும்பில் நடைபெற்ற

# உதைபந்தாட்டம்

## யாழ். பல்கலை. சாம்பியன்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சகல பல்கலைக் கழகங்களுக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

கொழும்பு சுகததாஸ மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி மொறட்டுவ பல்கலைக்கழக அணியை 3—1 என்ற கோல்கணக்கில் வென்று சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

1992 இலும் யாழ் பல்கலைக்கழக அணி சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதும இங்கு குறிப்பிடத்தக்கது. சி

---

பட்ஜட் வாக்களிப்பில்

# 34 காங்கிரஸ் எம்.பி.க்கள் ராவுக்கு எதிராக வாக்களிப்பர்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் அரசினால் இம்மாதம் 24-ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் நிதிநிலை பட்ஜட்டில் பிரதமர் ராவுக்கு எதிராக இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் பலர் வாக்களிக்கப் போவதாக முன்னாள் அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

பிரதமர் ராவின் எதிர்ப்பாளர்கள் 34 பேர் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் சேர்ந்து மேற்படி பட்ஜட்டுக்கு எதிராக வாக்களிக்கக் கூடும் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலமாக காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டுள்ள பிளவையும், தலைமைத்துவ போட்டியையுமே இது காட்டுவதாக அமைந்துள்ளது. முன்னாள் அமைச்சர் அர்ஜன் சிங்கின் ஆதரவாளர்களே இவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது

மேற்படி 34 பேரும் ராவின் பட்ஜட்டுக்கு எதிராக வாக்களிப்பார்களேயானால் அதன் மூலம் கட்சிக்குள் பெரும் நெருக்கடி தோன்றுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. [வி·சி,

---

மக்கள் வங்கியில்

# பிரபா படத்துடன் பிரசுரம் 9 ஊழியர் விசாரணையில்

(கொழும்பு)

மக்கள் வங்கிக்குள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படத்தைக் கொண்ட பிரசுரங்களை விநியோகிக்க இருந்ததாக மக்கள் வங்கி ஊழியர் 9 பேர் இரகசியப் பொலிசாரினால் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் 'ஜாதிக சேவக' சங்கத்தை சேர்ந்த இந்த ஒன்பது பேரும் வடக்கு கிழக்கின் ஜனாதிபதி என்று பிரபாகரனை குறிப்பிட்டு இந்தப் பிரசுரத்தினை விநியோகிக்க இருந்ததற்கே இவர்கள் பொலிசாரினால் விசாரிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. -ம-சி

---

# மத்திய கிழக்கில் மேலும் 25,000 பேருக்கு வேலைவாய்ப்பு

[கொழும்பு]

மத்திய கிழக்கு நாடுகளில் மேலும் 25 ஆயிரம் இலங்கையர் வேலைவாய்ப்புப் பெறுவார்கள்.

தொழில் தொழிற்பயிற்சி அமைச்சரின் தலைமையிலான தூதுக்குழு சமீபத்தில் தெற்காசிய நாடுகளுக்கு விஜயம் செய்த போது இலங்கையர்களுக்கு இந்த வேலைவாய்ப்புகளை வழங்க விருப்பம் தெரிவிக்கப்பட்டதென்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் எம். விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

குவைத் நாட்டின் தொழில் சேம நல அமைச்சர் தமது நாட்டில் இலங்கையர்க்கு கூடுதல் வேலை வாய்ப்புக்களை வழங்க இணங்கியுள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியமும் லெபனானும் கூட இலங்கையர்க்கு வேலைவாய்ப்பு வழங்க இணங்கியிருக்கின்றன,

நியாயமான சேவை நிபந்தனைகள் அடிப்படையில் இந்த நாடுகளுடன் இலங்கை அரசு ஒப்பந்தங்களை செய்து கொள்ளும்.

இதன் மூலம் மூன்று லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதென்ற அரசாங்கத்தின் திட்டம் நிறைவேற்றப்படும் என்று திரு. விஜேரட்ன மேலும் தெரிவித்தார். (இ-ஞ

---

போருக்காக

# 41 நிமிடத்திற்கு ரூ. 25லட்சம் செலவு

[கொழும்பு[

இலங்கையில் போருக்காக 41 நிமிடம் செலவிடப்படும் தொகையே, 25 லட்சம் ரூபாவாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: நாடாளுமன்ற உறுப்புனர் ஒருவருக்கு ஒரு வருடத்துக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டஅபிவிருத்தி நிதியாக 25 லட்சம் ருபா தான் ஒதுக்கப்பட்டு வருகின்றது.

எனவே அபிவிருத்தி பற்றி சிந்திப்பதற்குமுன்பு நாட்டை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்லும் போரை நிறுதிதுவதற்கான வழிவகைகள் பற்றி சிந்திக்க வேண்டுமென்றார். ம சி

---

விடுதலைப்புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அல்ல என புலிகள் தெரிவித்ததுடன் இது பற்றி சந்திப்பு நடாத்தவும் தாங்கள் தயாராயிருப்பதாகவும் புலிகள் தெரிவித்ததாக இராணுவத்தினர் தெரிவித்ததாக பி, பி. சி, கூறியது, சி - ம

---

## ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தமது பதவிகளை உறுதிப்படுத்துமாறு தென்னிலங்கையில பல பாடசாலை ஆசிரியர்கள் கடந்த 5-ம் திகதி பகல் காலி பஸ் நிலையத்திற்கருகில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றினை நடாத்தினர். -ம-சி

---

மீனவர் விவகாரம்

# இலங்கை - இந்தியா விரைவில் கூட்டம்

(கொழும்பு]

இலங்கை இந்திய மீனவர்களிடையே எழும் பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்காக இரு நாடுகளும் விரைவில் இருதரப்புக் கூட்டம் ஒன்றை நடாத்தவுள்ளன. என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா தனது இந்திய விஜயத்தின் போதே மேற்கண்ட முடிவை அங்கு எடுத்ததாக வெளிநாட்டு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் இம்சிக்கப்படுவது குறித்தும் இலங்கை ஜனாதிபதிக்கு இந்திய தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. ]ம-சி)

---

புதிய தேர்தல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு தேர்தல் தொகுதி ரீதியில் 160 அங்கத்தவர்களும், மாவட்ட ரீதியில் 75 அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர். இ-சி

---

பலாலியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாயும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனராம்.

இதையடுத்து படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடாத்தியோர்களை நோக்கி இராணுவத்தினரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் எனினும் எவரும் கொல்லப்படவில்லை எனவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். -ம-சி

---

வத்தேகமவில்

(1ம்பக்கத் தொடர்ச்சி)

மருந்துகள், ஒருகிலோ கஞ்சா என்பனவும் கைப்பற்றப்பட்டனவாம்.

இதையடுத்து இந்த வர்த்தகரையும் அவரது உதவியாளரையும் பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்களுக்கும் ஜே. வி. பி. யினருக்கும் தொடர்புகளுண்டா என்பது குறித்தும் பொலிசார் விசாரணைகளை நடத்திவருகிறார்கள். சி

---

மேலதிகமாக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றிக்கொண்டு வவுனியா கண்டி வீதியிலுள்ள ரம்மிய ஹவுஸ் இராணுவ அலுவலகத்துக்குச் சென்று அறிவித்தால் மறுநாள் சோதனைகளை ஈரப்பெரியகுளம் இராணுவதடை முகாமில் முடித்துக் கொண்டு தாமதமின்றி வடக்கு நோக்கிச் செல்லமுடியும். இந்த நடைமுறை உடனடியாக அமுலுக்கு கொண்டுவரப்படவுள்ளது.

வடபகுதிக்கு செல்லும் லொறிகள் இனிமேல் 60 லீற்றர் டீசலை லொறியின் டீசல் தாங்கியில் எடுத்துச் செல்லலாம். முன்னர் 40 லீற்றர் டீசல் மட்டுமே அனுமதிக்கப்பட்டது.

ஈரப்பெரியகுளம் இராணுவ முகாமில் காலை 7மணி தொடக்கம் மாலை 4-30 மணி வரை வாகனச் சோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். ம-இ-சி

---

## புதுவருடத்திற்குமுன் பரீட்சை முடிவு

(கொழும்பு)

94-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. (சாதாரண) பரீட்சைப் பெறுபேறுகள் புது வருடத்துக்கு முன்பு வெளிவரும் என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சி-ம-

---

## பாகிஸ்தான் வெற்றி

(ஷார்ஜா)

ஷார்ஜாவில் நடைபெறும் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்று பாகிஸ்தான், பங்களாதேஷை ஆறு விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 50 ஓவர்களில் எட்டு விக்கெட்டுகளை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தான் 29.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 152 ஓட்டங்களைப் பெற்றது.

இன்றைய போட்டியில் இந்தியாவை எதிர்த்து இலங்கை மோதும். வி சி

---

அரசின் அரசியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விலும் இது இடம்பெறவில்லை.

அரசு அதிகாரப் பகிர்வை எப்படி அமைப்பது என்ற தனது பிரேரணைகளை தயார்படுத்தியுள்ளது. இதுபற்றி விடுதலை புலிகளுடன் பேசவும் முனைகின்றது. ஆனால் புலிகள் தமது நான்கு முக்கிய கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் வரை அரசியல் தீர்வு பற்றிப் பேசமுடியாது எனவும் கூறிவிட்டனர்.

நாளை நடைபெறவுள்ள பேச்சுக்களில் புலிகள் தமது 4 கோரிக்கைகள் தொடர்பாகவே பேசவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் சமாதானப் பேச்சுக்கள் தொடங்கியதிலிருந்து அரசுக்கும் புலிகளுக்குமிடையில் பரஸ்பர நம்பிக்கை குறைவடைந்துள்ள தாகவே தெரிகிறது. இழுத்தடிக்கும் பேச்சாகவே இது அமையப் போகின்றன எனவும் பி.பி.சி. குறிப்பிட்டது. -சி

---

பலபத்தபெண்டி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டிடக்கலைஞர் திரு. நவீன் குணரட்ணவுககு பதிலாகவே ஆயர் கென்னத் பெர்னாண்டோவும், பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொடவும் இக்குழுவில் இடம் பெறுவதாக கூறப்படுகிறது

நாலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் இரு சிரேஷ்ட அமைச்சர்கள் பங்கு பற்றுவர் என அரச தரப்பில் முன்னர் கூறப்பட்டு வந்தபோதும் தற்போது அக்குழுவில் அமைச்சர்கள் இடம்பெறமாட்டார்கள் என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னைய பேச்சுவார்த்தைகளைப் போன்றே அரசு இம்முறையும் அதிகாரம் அற்றதொரு குழுவையே பேச்சுக்காக அனுப்பவுள்ளதாகவும் அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர். சி

---

# ஹபரண வருகிறது

[நெல்லியடி]

940 மெற்றிக்தொன் மாவை ஏற்றிக்கொண்டு திருமலையிலிருந்து புறப்பட்ட ஹபரண கப்பல் நாளை திங்கட்கிழமை காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும். 160சி

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 9ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது,
Reg stered as a Neaws pa er a the General Post office Sri Lanka under Li en e number B/1633613,